(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

முற்பகல் 11—30

இங்கே பாருங்கள். நான் இதையெல்லாம் allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) இவற்றையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. சபையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள். அவ்வளவுதான் நான் உங்களிடத்தில் கேட்பேன். இதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று, தொடர்ந்து 'பேசவிடு, பேசவிடு' என்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

(ஆ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தாள்களை உயர்த்திக் காண்பித்து கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மானியக் கோரிக்கைகள், 2017–2018, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017–2018 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: (குறுக்கீடுகள்)

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, Ch. Vidyasagar Rao, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the Financial Year 2017–2018."

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)